புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜனவரி 18, 2024 • புரட்சி 24 • முழக்கம் 01 • விலை ரூ.3.00

# அரசுப் பள்ளிகளில் AI பயிற்சி; பாராட்டத்தக்க முயற்சி

தமிழ்நாடு நவீனமடைவதற்கும் அறிவியல் மனப்பான்மையோடு வளருவதற்கும் மிக முக்கியக் காரணம் பெரியார். அறிவியலை உள்வாங்கிக் கொண்டு, நவீனங்களுக்கு ஏற்ப மாறிக்கொள்ள வேண்டுமென்ற சிந்தனை பெரியாரிடம் இருந்தது. திராவிட இயக்கம் ஆட்சியில் அமர்ந்தபோது அந்த சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கிடைத்தது. அதனால்தான் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னே நிற்கிறது தமிழ்நாடு.

வடக்கே உள்ள கான்பூர் ஐஐடி-யிலும் தெற்கே இருக்கிற கிண்டி பொறியியல் கல்லூரியிலும்தான் இந்தியாவில் முதன்முதலாக கணினிப் பயன்பாடு தொடங்கியது. ஐபிஎம் 1620 வகை கணினி அது. 1965ஆம் ஆண்டில் கிண்டி பொறியியல் கல்லூரிக்குச் சென்ற பெரியாரிடம் இப்படியொரு கருவி வந்திருக்கிறது எனச் சொல்கிறார்கள். உடனே அதைப் பார்க்க வேண்டுமென்றார் பெரியார். வயதோ 86. படியேற முடியாமல் இருந்த நிலையில், நாற்காலியில் அமரவைத்து பெரியாரை மாடிக்கு தூக்கிச் சென்று கணினியைக் காட்டினர். அது எப்படிச் செயல்படுகிறது என ஒவ்வொன்றாக விளக்கம் கேட்டுக்கொண்டதுடன், அதன் செயல்பாடுகளை சோதித்தும் பார்த்து வியந்தார் பெரியார். கம்ப்யூட்டருக்கு தமிழில் என்ன பெயர் என பெரியார் கேட்க, அங்கு எவருக்குமே தெரியவில்லை. பேராசிரியர்களே கம்ப்யூட்டரைப் பார்த்திராத அந்த காலத்தில், தமிழில் எப்படி அதற்குள் பெயர் சூட்டியிருப்பார்கள்? அவர்களின் மவுனத்தைப் புரிந்துகொண்ட பெரியார், “நீ கண்டுபிடித்து இருந்தால்தானே பெயர் வைத்திருப்பாய்?” என கூறினாராம்.

இவ்வளவு பின் தங்கியிருந்த தமிழ்நாடு இன்றைக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பெங்களூருவுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நகரமாக சென்னையை உருவாக்கியிருக்கிறது. நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சியிலும் முன்னிலை வகிக்கிறது. ஸ்டார்ட் அப் துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. தொழில்நுட்பத் துறைக்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான திறமைமிக்க பட்டாதாரிகளை ஆண்டுதோறும் அனுப்பிக்கொண்டிருக்கிறது. இதெல்லாம் சாத்தியமானதற்கு மிக முக்கியக் காரணம் கல்வி வளர்ச்சியோடு சேர்த்து அறிவியல் வளர்ச்சியையும் கணக்கில்கொண்டு தீட்டப்பட்ட திட்டங்கள்.

எதிர்வரும் உலகை கணினியும் இணையமும்தான் ஆளப்போகிறது என்ற கணிப்புகள் தெரியத் தொடங்கிய 1990-களில் மாநில அரசுக்கு என முதன்முதலாக தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட்டார் கலைஞர். வெளியிட்ட ஆண்டு 1997. தகவல் தொழில்நுட்பத் துறைக்கு தனி அமைச்சரையும் நியமித்தார். இந்தியாவிலேயே முதன்முதலாக டைடல் பூங்காவை நிறுவினார். இந்த அடித்தளம் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சிக்கு பாதை அமைத்ததுடன், பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியது.

அதன்பிறகு கால் நூற்றாண்டுகளைக் கடந்துவிட்ட இச்சூழலில் வீட்டுக்கு வீடு ஸ்மார்ட்போன்கள், தொலைக்காட்சி, மடிக்கணினி பயன்பாடு சாதாரணமாகிவிட்டது. தொழில்நுட்பத்துறை வேறொரு புதிய உலகுக்குள் நம்மை இழுத்துச் சென்றிருக்கிறது. 1965-இல் பெரியாரை கம்ப்யூட்டர் வியக்கவைத்தது என்றால், 2024-இல் நம்மை வியக்க வைத்துக் கொண்டிருப்பது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (AI). மனிதனுக்கும் இயந்திரங்களுக்கும் உள்ள ஒரே வேறுபாடு என்னவென்றால், மனிதன் சிந்தித்துச் செயல்படுவான். இயந்திரங்கள் மனிதர்கள் ஏற்படுத்திய செயல்முறைகளின்படி (program) இயங்கும். ஆனால் இயந்திரங்களும் மனிதர்களைப் போல சிந்தித்துச் செயல்படத் தொடங்கினால் எப்படி இருக்கும்? அந்த முயற்சிதான் செயற்கை நுண்ணறிவு.

எதிர்வரும் உலகின் வேலைவாய்ப்புகளில், அன்றாட வேலைகளில், மனித வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறது இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். 2035ஆம் ஆண்டுக்குள் உலகப் பொருளாதாரத்தில் 15.7 டிரில்லியன் டாலர் அளவுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பங்களிக்கும் என்றும் சில ஆய்வுகள் சொல்கின்றன. அதில் அமெரிக்காவும் சீனாவும் மட்டுமே 70 விழுக்காடு சந்தை மதிப்பைக் கொண்டிருக்கும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

அத்தகைய பெரும் பொருளாதார வாய்ப்புகளையும், நவீன மாற்றங்களையும் ஏற்படுத்தக் கூடிய AI தொழில்நுட்பத்தில் தமிழ்நாடும் சிறந்து விளங்க வேண்டுமென்றால், பள்ளிகளில் கணினியுடன் சேர்த்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். அத்தகைய முயற்சியை இந்தியாவிலேயே முதன்முறையாகத் தொடங்கியிருக்கிறது நம்முடைய “திராவிட மாடல்” அரசு.

உலகின் மிகப்பெரிய மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான மைக்ரோசாப்ட் உடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை TEALS (தொழில்நுட்பக் கல்வி மற்றும் கற்றல் ஆதரவு) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு AI தொழில்நுட்பம், சாட் ஜி.பி.டி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை கற்றுக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கம். முதற்கட்டமாக 3 மாவட்டங்களில் 14 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம், படிப்படியாக 100 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படுகிறது. HTML, C++, Python, கேம் டெவலப்மென்ட் மற்றும் AI ஆகியவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அரசுப் பள்ளி மாணவர்களும் நவீன தொழில்நுட்பங்களை எளிமையாக கற்பதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதனை அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்வதுடன், பாடத்திட்டங்களிலும் இணைக்கப்பட வேண்டும். “அடுத்த 2 ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கட்டாயப் பாடமாக்குவதற்கான பணிகள் நடந்து வருகின்றன” என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியிருக்கிறார். தொழில்நுட்ப ஆராய்ச்சிப் படிப்புகளை நோக்கி தமிழ்நாட்டு மாணவர்கள் நகருவதற்கான வாய்ப்பாகவும், அடுத்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய சந்தை வாய்ப்புகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கப் போகிற துறையில் நம்முடைய இருப்பைத் தக்கவைக்கவும் இம்முயற்சிகள் அவசியமானவை. இன்னும் அதிகரிக்க வேண்டிய தேவையுடையவை.




# களைகட்டிய பொங்கல் நிகழ்ச்சிகள் சென்னையில் மேயர் பிரியாராஜன் பங்கேற்பு

திருவல்லிக்கேணி பகுதி சார்பில் 24-ஆம் ஆண்டு தமிழர் திருநாள் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் 07.01.2024, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளை திமுக இளைஞரணி மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ் தொடங்கி வைத்தார்.

விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள் 13.01.2024, சனிக்கிழமை நடைபெற்றது.

“மாணவக் கலைஞர்கள் குழுவின்” பறையிசை - ஒயிலாட்டம் - மரக்கால் ஆட்டம் - தீச்சிலம்பம் - மயிலாட்டம் - மாடாட்டம் - புலி ஆட்டம், Dude’z in Madras குழுவின் ராப் இசை, U Won Dance Crewe பகுதி மாணவிகளின் நடனம், கானா சுதாகர் - புரட்சிமணியின் மக்களிசை சங்கமம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவுக்கு மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமை தாங்கினார். இராஜேசு வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் வணக்கத்துக்குரிய சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, 119வது வார்டு மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், விசிக மைய சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சாரநாத், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் பங்கேற்று விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

நிகழ்வில் கழக வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு 100 சந்தாக்களுக்கான தொகை ரூ.30,000-யை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி வழங்கினார். உதயா நன்றி கூறினார்.

**மயிலாப்பூர் :** தமிழர் திருநாள் பொங்கல் விழா மக்கள் கலை விழா விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா பறை இசை - நடன நிகழ்ச்சி மயிலைப்பகுதியில் சுப்புராயன் சாலை அம்பேத்கார் சிலை அருகில் மாலை 5 மணி அளவில் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சி தொடக்கத்தில் அம்பேத்கர் சிலைக்கு மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி மாலை அணிவித்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

பரிசளிப்பு நிகழ்ச்சியுடன் Free way crew நடன நிகழ்ச்சி மற்றும் பறை இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மக்கள் மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தனர்.

**திண்டுக்கல் :** தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 16.01.2024 செவ்வாய் காலை 10 மணிக்கு நடைபெற்றது. நிகழ்விற்கு சுரேகா, மீனாலட்சுமி, உஷாராணி, பிரியா, கௌசின் பானு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி மற்றும் மாவட்ட இணையதள பொறுப்பாளர் ராஜா இருவரும் பொங்கல் விழா பற்றி சிறப்புரையாற்றினார்கள்.

## தலையங்கம்

# இப்படியும் ஒரு இந்துயிசம்!

பண்பாடு, கலாசாரம் போன்றவை மாறாது, நிலையானது என்பது உலகம் முழுவதும் இருக்கிற பழமைவாதிகளின் கருத்து. ஆனால் அந்தந்த ஊர்களுக்கு ஏற்றவாறு அனைத்து மத கலாச்சாரங்களும் வளைந்து நெளிந்துதான் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவில் மட்டும்தான் இந்து மதம் சிறு மாற்றங்களுக்குக் கூட இடம்தர முடியாது என இன்னமும் ஜாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்தத் துடிக்கிறது. நமக்கு மிக அருகாமையில் இருக்கிற இந்தோனேசியாவில் கூட இந்து மதத்தில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை, அடக்குமுறைகள் இல்லை என்ற செய்திகள் சமீபத்தில் ஆங்கில நாளேடு ஒன்றில் வெளிவந்திருக்கிறது. கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூகவியல் கொள்கைத் துறை பேராசிரியர் நீரஜ் கவுசால் சமீபத்தில் இந்தோனேசியாவுக்கு பயணம் செய்து, அங்கு இந்துயிசம் எப்படி இருக்கிறது என்ற ஆச்சரியம் தரக்கூடிய தகவல்களை கொடுத்திருக்கிறார்.

இந்தோனேசியா இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடு. இந்துக்கள் குறைந்த எண்ணிக்கையில் அங்கு வாழ்கின்றனர். அவர்கள் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த வணிகர்கள். இந்தியாவைப் போல அங்கும் இந்துக்களிடம் ஜாதி இருக்கிறது. ஆனால் ஜாதியின் பெயரால் இங்கிருப்பதைப் போன்ற ஏற்றத்தாழ்வுகள் அங்கு இல்லை. எல்லோரும் சமமாகவே நடத்தப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகம் என ஒன்று அங்கு இல்லை. தீண்டாமைக் கொடுமைகள் முந்தையக் காலங்களில் நடந்தன என்பதற்கான சான்றுகளும் எதுவும் இல்லை. அங்கு ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு அதிக உரிமைகள் இருக்கின்றன. இந்தியாவில் இன்னமும் பட்டியல் சமூகத்தினர் நுழைய தடை விதிக்கப்பட்டிருக்கிற கோயில்கள் இருக்கின்றன. ஆனால் இந்தோனேசியாவில் கோயிலுக்குள் நுழைவதற்கு ஜாதி ஒரு பொருட்டே இல்லை.

இந்தோனேசியாவின் பாலியில் பெசாகி கோயில் வளாகம் உள்ளது. அகுங் மலைச்சரிவில் உள்ள இந்தக் கோயில் வளாகத்தில் பல்வேறு கடவுள்கள் இருக்கின்றன. உலகின் மிகப்பெரிய இந்து கோயில்களில் இதுவும் ஒன்று. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களே அந்த கோயில்களில் அர்ச்சனை செய்கிறார்கள். பார்ப்பனர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க முடியும் என்று இங்கிருப்பது போன்ற கட்டுப்பாடுகள் அங்கு இல்லை. ஆகமம் கெட்டுவிடும் என்றும் பேச்சும் அங்கு இல்லை. அனைத்து சமூகத்தினரும் அர்ச்சகர்களாக முடியும், இறைப்பணி செய்ய முடியும். சபரிமலைக்கு பெண்கள் செல்லக்கூடாது என்பதுபோன்ற கட்டுப்பாடுகள் இந்தோனேசியாவில் எந்தக் கோயிலிலும் இல்லை. எல்லா கோயில்களுக்கும் சென்று ஜாதி, பாலின பேதமின்றி யார் வேண்டுமானாலும் வழிபடலாம்.

பெண்கள் முகங்களை மறைக்க வேண்டிய கட்டாயமும் அங்கு இல்லை. சட்டையும் பாவாடையும்தான் அவர்களின் வழக்கமான உடையாக இருக்கிறது. துப்பட்டா தொல்லையும் இல்லை. அதேபோல ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்துவிட்டால் புனிதம் கெட்டுவிடும், குலப்பெருமை கெட்டுவிடும் என்ற வரட்டுக் கவுரவமும் இந்தோனேசியாவில் இல்லை. வேறு ஜாதியினரை பெண்கள் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்ற சமூகக் கட்டுப்பாடுகளுக்கு இந்தோனேசிய இந்துயிசத்தில் கொஞ்சமும் இடம் இல்லை. எந்த ஜாதியில் எவர் வேண்டுமானாலும் திருமணம் செய்துகொள்ளலாம். நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் இந்தோனேசிய இந்துக்களிடம் 25 விழுக்காட்டிற்கும் குறைவுதான். 75 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் தங்களுடைய வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேர்வு செய்துகொள்கிறார்கள். ஆனால் இந்தியாவில் இன்னமும் 95% திருமணங்கள் குடும்பத்தினரால் ஜாதிகளுக்குள் நிச்சயிக்கப்பட்டு நடக்கும் திருமணங்களே.

இந்தியாவில் ஜாதிக் கட்டமைப்பை மீறி வேறு ஜாதியில் திருமணம் செய்தாலும், அந்தப் பெண்ணை ஆணின் ஜாதியில் அடைப்பதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்தோனேசியாவில் திருமணத்திற்குப் பிறகு ஆண் தனது மனைவியின் ஜாதியை எடுத்துக்கொள்கிறார். மனைவியின் சமூகத்துக்கான கடவுளை ஏற்றுக்கொண்டு வணங்குகிறார். இதனால் ஜாதிப் புனிதத்தைக் காக்க வேண்டிய கடமையோ அல்லது அதைப் பெருமை என்றோ கருதுகிற இந்திய இந்துக்களின் மனநிலை, இந்தோனேசிய இந்துக்களிடம் இல்லை என்பது இதிலிருந்தே புரிகிறது.

உலக வங்கி தரவுகளின்படி வேலைவாய்ப்புகளில் பங்கேற்கும் பெண்களின் விகிதம் இந்தியாவில் 24 விழுக்காடாக இருக்கிறது. ஆனால் இந்தோனேசிய வாழ் இந்துப் பெண்கள் வேலைவாய்ப்புகளில் பங்கேற்கும் விகிதம் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்கிறது. ஆண்களை விட பெண்கள் அதிக எண்ணிக்கையில் வேலைக்குச் செல்லும் போக்கு, இந்தோனேசிய இந்துப் பெண்களிடம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கிறது. இப்படி இந்துயிசத்தின் பெயரால் இந்தியாவில் இழைக்கப்படும் அநீதிகளையும், இந்தோனேசியாவில் தழைத்தோங்கும் மானுடப் பற்றையும் ஒப்பிட்டு அந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிறார் நீரஜ் கவுசால்.

ஒரே மதம்தான்... ஒரே கடவுள்கள்தான்... இந்தோனேசியாவில் இல்லாத ஏற்றத்தாழ்வுகள் இங்கு மட்டும் எப்படி வந்தது என்று சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரில், பண்பாடு– பழக்க வழக்கம் என்ற பெயரால் எவ்விதமான சமூகக் தடைகளும் இந்தோனேசிய இந்துயிசத்தில் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் அங்கு ‘‘பார்ப்பனிய மேலாதிக்கம்’’ இல்லை. இங்கும் அந்த பார்ப்பனிய மேலாதிக்கத்தை தகர்ப்பதை நமது தலையாய கடமையாய் கொள்வோம்.

## ‘‘தமிழ்நாட்டுப் பள்ளிகளில் சமூக நீதிக் குரல்’’

*அரசுப்பள்ளிகளில் வகுப்புகள் தொடங்கப்படுவதற்கு முன்பு மாணவர்கள் சமூகநீதி பாடல் பாட வேண்டுமென்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விடுத்த வேண்டுகோளை ஏற்று, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒரு ஆணையை பிறப்பித்திருக்கிறார். உண்மையிலேயே இது வரவேற்கத்தக்க ஒரு முடிவாகும். பாடத்திட்டத்தில் தமிழ்நாட்டின் வகுப்புரிமை போராட்ட வரலாறு, சுயமரியாதை இயக்க வரலாறு இவைகளையும் சேர்த்தால் இளம் தலைமுறைக்கு வரலாறுகளை எடுத்துச்சொல்ல ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பது நமது உறுதியான கருத்து.*

*உத்தரப் பிரதேசத்தில் மாணவர் வருகைப் பதிவேட்டை ஆசிரியர் பதிவு செய்யும்போது, அங்குள்ள பல பள்ளிகளில் மாணவர்கள் ஜெய்ஸ்ரீராம் என்று கூறுவதாக சில படங்கள் முகநூலில் வந்துகொண்டிருக்கின்றன. இது உத்தரப் பிரதேசத்தின் நிலை. தமிழ்நாட்டில் கலைஞர் தமிழ்த்தாய் வாழ்த்து ஒன்றை அறிமுகப்படுத்தினார். நீராருங் கடலுடுத்த என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்தான் இப்போது, அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் தொடக்கப் பாடலாகப் பாடப்பட்டு வருகிறது. அதற்குமுன்பு அவரவர் விரும்புகின்ற கடவுள்களின் பாடல்கள்தான் பல்வேறு நிகழ்ச்சிகளில் பாடப்பட்டு வந்தன. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்த பெருமை கலைஞருக்கு உண்டு.*

*பிறகு, காஞ்சிபுரம் சங்கராச்சாரி, சமஸ்கிருத நூல் வெளியீட்டு விழா ஒன்றில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் ஒளிபரப்பியபோது எழுந்து நிற்காமல் உட்கார்ந்து இருந்தார். அது பெரும் பிரச்னையாக மாறியது. அப்போது சங்கராச்சாரி தியான நிலையில் இருந்ததால் எழுந்து நிற்கவில்லை என்று சப்பைக் கட்டு கட்டினார்கள். அதைத்தொடர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கட்டாயமாக அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து பாட வேண்டும், இது தமிழ்நாட்டினுடைய வாழ்த்துப் பாடல் என்று திட்டவட்டமாக ஒரு அறிக்கை வெளியிட்டதற்குப் பிறகு இப்போது தமிழ்த்தாய் வாழ்த்து எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.*

*தமிழ்நாட்டுப் பள்ளிகளில் சமூக நீதிக் குரல் கேட்கிறது, வடநாட்டில் ஜெய்ஸ்ரீராம் குரல் கேட்கிறது. இதுதான் இந்துத்துவா மாநிலங்களுக்கும் மதச்சார்பின்மையை பின்பற்றுகிற திராவிட மாடல் அரசுக்கும் உள்ள வேற்றுமை. சிந்திப்போம்.*

**(கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களின் 14.01.2023 நாள் வாட்ஸ் ஆப் பதிவு)**

## பார்ப்பனர்களுக்கு பதவிகளை வாரி இறைக்கும் பாஜக!

*1980-களில் பாஜக தொடங்கப்பட்ட சமயத்தில் அது முழுக்க பார்ப்பன - பனியாக்கள் கூடாரமாகத்தான் இருந்தது. இப்போதும் அதிகாரம் மிக்க உயர் பதவிகளில் அவர்கள்தான் இருக்கின்றனர் என்றாலும், ராமர் கோயில் இயக்கத்தில்தான் பிற்படுத்தப்பட்டவர்களை பொறுப்புகளில் அமர்த்தியது பாஜக. இப்போது கோயில் கட்டி முடிக்கப்படும் தருவாயில் மீண்டும் பார்ப்பனர்களுக்கே பதவி என்ற வழியில் வேகமாக பயணிக்கத் தொடங்கியிருக்கிறது பாஜக.*

*ஏற்கெனவே பார்ப்பனரான ஹிமந்த பிஸ்வா சர்மாவை அசாம் முதல்வராக நியமித்திருந்த பாஜக, சமீபத்தில் தேர்தல் நடந்து முடிந்த ராஜஸ்தானிலும் பார்ப்பனரான பஜன் லால் சர்மாவை முதல்வராக்கியிருக்கிறது. 2023-ஆம் ஆண்டின் இறுதியில் மத்தியப் பிரதேச துணை முதல்வராக ராஜேந்திர சுக்லா என்ற பார்ப்பனரையும், சத்தீஸ்கர் துணை முதல்வராக விஜய் சர்மா என்ற பார்ப்பனரையும் நியமித்தது பாஜக. ஏற்கெனவே உத்தரப் பிரதேச துணை முதல்வராக பிரஜேஷ் பதக் என்ற பார்ப்பனரும், மகாராஷ்டிர துணை முதல்வராக தேவேந்திர பட்னாவிஸ் என்ற பார்ப்பனரும் இருக்கிறார்கள். மக்கள் மிகச்சொற்பமாக இருக்கிற பார்ப்பனர்கள் பாஜக ஆட்சியில் 2 மாநிலங்களில் முதல்வர்கள், 4 மாநிலங்களில் துணை முதல்வர்கள். இதுதவிர கேபினட் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் மக்கள் தொகையில் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருக்கிற பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் சமூகத்தினருக்கும் அவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பாஜக ஆட்சியில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை.*

*“அயோத்தியில் பிரதமர் மோடி ராமர் சிலையை நிறுவக்கூடாது, அவர் ஒரு சூத்திரர், சூத்திரர் சிலையை தொட்டு நிறுவினால் சமூக ஒழுங்கு என்ன ஆவது?” என்று கொதிக்கும் சங்கராச்சாரிகள் ஒருவர் கூட, பார்ப்பனர்கள் எப்படி நேரடியாக ஆட்சியதிகாரத்தில் அமரலாம்? அது சனாதன தர்மத்தை மீறும் செயல் என்று கேட்பதில்லை. பார்ப்பனர்கள் நலன் என்று வரும்போது எல்லா விதிகளையும் தளர்த்திக் கொள்வார்கள். மற்றவர்களுக்கு என்றால் இல்லாத விதிகளையெல்லாம் புதிது புதிதாக வகுத்து விடுவார்கள்.*

## குடும்ப விழாக்கள் நடத்த கோவை மாவட்டக் கழகம் முடிவு

*கோவை மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 11.01.2024, வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கோவை அசோக் அலுவலகத்தில் நடைபெற்றது. கழக மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை தாங்கினார்.*

*கூட்டத்தில் வருகிற மார்ச் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது, கோவை மாவட்டக் கழகத்திற்கு மாவட்ட அலுவலகம் அமைப்பது, ஆண்டிற்கு ஒருமுறை கோவை மாவட்டத் தோழர்கள் ஒன்றிணைந்து குடும்ப விழா நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.*

*கலந்துரையாடல் கூட்டத்தின் முடிவில் புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தா தொகையாக ரூ.25,000 வழங்கப்பட்டது.*

# தமிழ்க் குடிகளும் ஆரிய ஜாதிகளும் ஒன்றல்ல!

(ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூரில் 24.12.2023 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டத்தில் தமிழ்மண் தன்னுரிமைக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் ஜெயராமன் பேசிய உரை)

## பேராசிரியர் ஜெயராமன்



இந்த கூட்டத்தை சுற்றும் முற்றிலும் பாருங்கள்.. நாகரீகமான உடை உடுத்தியுள்ள இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள், அறிவார்ந்த பெருமக்கள், பெயருக்கு பின்னால் எம்.பி.பி.எஸ், எம்.காம், எம்.ஏ.பி.எல் போன்ற பட்டங்கள், பையில் பணம், ஒரு மகிழ்ச்சியான உளநிலை.... நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து இந்த உரையை கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். மகிழ்ச்சியான ஒரு நல்ல சூழ்நிலை நிலவுவதாக நாம் கருதுகிறோம். ஆனால் இது ஒரு நூறாண்டுகளுக்குள் உருவானதுதான். நான் பேசுவதை உரையாக யாரும் கருத வேண்டாம், ஆனால் உருப்படியான தகவல்களாக கவனித்து சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த உலகம் 100 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி கிடையாது. பல தெருக்களில் நம்மை போன்ற பெரும்பான்மையானோர் நடக்கவே உரிமை கிடையாது. சில ஜாதிகளுக்கு திருமணம் செய்துகொள்ள உரிமை கிடையாது. சொத்து வைத்துக்கொள்ள உரிமை கிடையாது. இப்போதும் சில பகுதிகளில் சைக்கிளில் செல்ல முடியாது. ஊருக்கு வெளியே சென்றுதான் அவன் சைக்கிளை ஓட்ட முடியும். 1920களில் உள்ள நிலையைக் கூட சில தோழர்கள் பதிவு செய்துள்ளனர். பெண் பார்க்க செல்லும்போது, ஆண்ட ஜாதியிடம் அனுமதி பெற்றுதான் வேட்டி, சட்டை அணிய முடியும். அதுவும் சட்டை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு ஊர் தாண்டிய பிறகு, புளிய மரத்தின் கீழ் நின்று உடையை மாற்றிக்கொண்டு, பெண் பார்த்து வந்த பிறகு மீண்டும் ஊருக்குள் நுழையும் முன் பழைய அழுக்கு உடையை மாற்றிக்கொண்டு, புது துணியை கக்கத்தில் வைத்துகொண்டுதான் ஊருக்குள் நுழைய முடியும். இத்தகைய அவல நிலைதான் அப்போது இருந்தது.

பல இளைஞர்களுக்கு நம் நிலை என்னவாக இருந்தது, எப்படி மாறியது என்பதே தெரியாது. ஆண்டாண்டுகாலமாக இந்த உலகம் இப்படித்தான் இருந்து வருகிறது என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த சூழ்நிலையைக் கொண்டுவருவதற்கு பலதலைவர்கள் கடுமையாக பாடுபட்டுள்ளனர். அதில்தான் இந்த நிலை கிடைத்துள்ளது. நாம் படித்ததற்கு பெரியார் எப்படி காரணமாவார் என்றெல்லாம் பலரும் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் இப்போது நாம் படித்துவிட்டோம், நம் பெற்றோர்கள் அதிகபட்சம் ஐந்தாவது வரைதான் படித்திருப்பார்கள். தாத்தாவுக்கு அந்தப் படிப்பும் கிடையாது.

கல்விக் கடவுளாக வணங்கப்படும் சரஸ்வதியை கொண்டுள்ள இந்த நாட்டில் நாம் படித்துவிட்டோம், ஆனால் நம் தந்தை, தாத்தா உள்ளிட்டோர் படிக்க முடியவில்லையே ஏன்? இன்றைக்கு சரஸ்வதிக்கு படையல் போடுவது போல, அன்றைக்கும் படையல் போட்டார்களே? அவர்கள் மட்டும் ஏன் படிக்கவில்லை? ஏனென்றால் நம்முடைய பாட்டன், பூட்டன் காலத்தில் பெரியார் பிறக்கவில்லை, அதனால் அவர்களால் படிக்க முடியவில்லை. அண்ணல் அம்பேத்கர் போன்ற மாபெரும் தலைவர்கள் அன்று பிறக்கவில்லை. ஆனால் இந்தத் தலைவர்கள்தான் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்கி வைத்தனர்.

நம் வீட்டுப் பிள்ளைகள் காவல்துறையில், வழக்கறிஞராக, ஆட்சியராக, வட்டாட்சியராக உள்ளனரென்றால் அதற்குப் பல பேர் உழைத்து இருக்கிறார்கள். அந்த உழைப்பை நல்கியவர்தான் தந்தை பெரியார். இன்றைக்கு இருக்கக்கூடிய நாகரீகமான வாழ்க்கைக்கு அவர்களது போராட்டங்கள் தான் காரணமாக அமைந்தது. தந்தை பெரியார் மறைந்து ஐம்பது ஆண்டுகளாகி விட்டது. ஐம்பது ஆண்டுகள் கழித்து எல்லோரும் பெரியாரைத்தான் பேசுகிறார்கள். சில பேர் பெரியாரை தூற்றுகிறார்கள். இத்தனை ஆண்டுகள் கழித்தும் பெரியாரை தூற்றுவதற்கு என்ன காரணம்? இவ்வளவு நாள் கழித்து இவ்வளவு தலைவர்களில் பெரியார் ஒருவரை மட்டும் ஏன் தூற்றுகிறார்கள் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டுமா?

"சனாதனம் எதிர்க்கப்பட வேண்டியது, அநியாயமானது. அது நம்மை அடிமையாக்குகிறது. திராவிடம் அதை எதிர்த்து போராடி வந்திருக்கிறது, போற்றத்தக்கது. அதுதான் நமக்கு பாதுகாப்பு அரணாக உள்ளது" என்பது வரைக்கும் நம்முடைய இளைஞர்களுக்கு புரிகிறது. ஆனாலும் ஏதோ ஒன்று அதில் இன்னும் புரியவில்லை. சனாதனம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன? என்ற குழப்பம் இருக்கிறது. நன்றாக தெரியும் கண்ணாடியாக இருந்தாலும், தூசியை துடைத்துவிட்டால் இன்னமும் நன்றாகத் தெரியுமே! அதுபோல. சனாதனம் பற்றிய வரலாறு, திராவிடம் பற்றிய வரலாறு, அதன் ஆணிவேர் இதைப் பற்றியெல்லாம் இளைஞர்களுக்கு புரிய வைத்துவிட்டால் மீதி வேலையை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

இப்போது ஆர்.என்.ரவி என்ற ஆளுநர் இருக்கிறார். எங்கு சென்றாலும் சனாதனம், சனாதனம் என்று அதைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார். சனாதனத்தால்தான் இந்தியா உருவாக்கப்பட்டுள்ளது, முனிகளும், ரிஷிகளும்தான் இந்தியாவை உருவாக்கினார்கள் என்றெல்லாம் பேசிவருகிறார். ஜாதியை மறுத்து சமத்துவ சமுதாயம் படைக்க விரும்பிய வள்ளலாரை சனாதனத்தின் உச்ச நட்சத்திரம் என்று அவரை கபளீகரம் செய்யும் முயற்சியில் அவர்கள் இறங்கியுள்ளனர். சனாதனம் ஒழிக்கப்பட வேண்டியது என்று பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் தலைக்கு 10 கோடி ரூபாய் விலை வைக்கின்றனர் வடநாட்டு சாமியார்கள். பாஜகவை சேர்ந்த அமித் மாளவியா "இனப் படுகொலை செய்ய சொல்கிறார் உதயநிதி" என்று அப்பட்டமான ஒரு பொய்யைக் கூறுகிறார். பாஜகவை சேர்ந்த கஜேந்திரசிங் செகாவத் என்பவர் அமைச்சர் உதநிதியின் நாக்கை வெட்ட வேண்டும், கண்ணை நோண்ட வேண்டும் என்றெல்லாம் பேசுகிறார். சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென்றுச் சொல்வது இவ்வளவு பெரிய குற்றமா? அப்படியானால் சனாதனம் என்றால் என்ன? அது எப்படி வளர்ந்தது என்பதைப் பற்றி முதலில் சொல்கிறேன்.

> **"இந்த நான்கு வர்ணங்கள் இருக்கிறதே, இது ஒரு நான்கு அடுக்கு மாளிகை. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன். ஆனால் ஒரு அடுக்கில் இருப்பவன் இன்னொரு அடுக்குக்குப் போக முடியாது. அந்த மாளிகையில் படிக்கட்டு என்பதே கிடையாது"**

வரலாற்றை நாம் கிபி, கிமு என்று இரண்டாகப் பிரிக்கிறோம். கி.மு. 1200 -இல் இந்தியத் துணைக்கண்டத்திற்குள் ஆரியர்கள் என்ற ஒரு கூட்டம் நுழைகிறது. வரும்போதே பாட்டுப்பாடிக்கொண்டுதான் வந்தார்கள். அந்த பாடலின் தொகுப்புக்கு ரிக் வேதம் என்று பெயர். அந்த ரிக்வேத பாடல்கள் 10 மண்டலங்களாக உள்ளன. அதில் 10வது மண்டலத்தில் மிக முக்கியமான ஒன்று உள்ளது. அதுதான் 'புருஷ சூத்தம்' எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கும் நமக்கும் தொடர்பு கிடையாது. இந்த புருஷ சூத்தம் ஒரு யாகத்தை பற்றி பேசுகிறது. "ஒரு பெரிய உடல் யாகத்தில் பலியிடப்படுகிறது. பலியிடப்பட்ட அன்றிலிருந்து தலையில் இருந்து பிராமணனும், தோளில் இருந்து சத்திரியனும், தொடையில் இருந்து வைசியனும், காலில் இருந்து சூத்திரனும் தோன்றினார்கள் என்று எழுதிவைத்துள்ளனர்.

பிராமணன் படிக்க, கற்பிக்க, யாகம் செய்ய உரிமை உள்ளவன். சத்திரியன் என்பவன் போர் புரிய, நாட்டை ஆட்சி செய்ய உரிமைப் பெற்றவன், வைசியன் என்பவன் வளம் பெருக்க, தொழில் செய்ய உரிமை உடையவன். இதில் நான்காவதாக உள்ள சூத்திரர்கள், அவர்களது நிறம் கருப்பு, அவர்களது உணர்வு துயரம், துன்பம், அவர்கள் மேலே இருக்கிற மூன்று வர்ணத்தாருக்கும் தொண்டு செய்வதற்காகவே பிறந்தவர்கள். சொத்து வைத்துக்கொள்ள, பொருள் வைத்துக்கொள்ள உரிமை கிடையாது. இதற்குத்தான் நால்வருண பகுப்பு என்று பெயர்.

தமிழர்களுக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஏற்றத்தாழ்வு என்பதே கிடையாது. ஆரியர்களின் சமூகம் என்பது *Vertical* முறையில் (மேலே இருந்தே கீழே) படிநிலைகளாக இருக்கும், ஏற்றத்தாழ்வு மிகுந்தது. அதை அம்பேத்கர், "இந்த நான்கு வர்ணங்கள் இருக்கிறதே, இது ஒரு நான்கு அடுக்கு மாளிகை. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன். ஆனால் ஒரு அடுக்கில் இருப்பவன் இன்னொரு அடுக்குக்குப் போக முடியாது. அந்த மாளிகையில் படிக்கட்டு என்பதே கிடையாது" என்று அண்ணல் அம்பேத்கர் சொல்லுவார்.

அதைத்தான் பெரியாரும் சொல்வார். "ஒருவன் தாழ்ந்த ஜாதியாகப் பிறந்து வேறு உயர்ந்த ஜாதிக்கு போனதாக வரலாறு உண்டா?" என்று பெரியார் கேட்டார். ஒருவன் அறிவாளியாகலாம், பணக்காரனாகலாம், ஆனால் அவன் பிறந்த ஜாதியில் இருந்து தப்பிக்கவே முடியாது. இது ஆரியர்களுடையது. இந்த நான்கு வர்ணங்களும் கலக்காத அளவுக்கு அவர்கள் பாதுகாத்து வைத்துள்ளனர். அப்படி ஒருவேளை கலந்துவிட்டால்... ஒரு பிராமண பெண்ணை ஒரு சூத்திரன் திருமணம் செய்து குழந்தை பிறந்தால் அந்த குழந்தைக்கு சண்டாளன் என்று பெயர். இந்த நான்கு வர்ணங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து குழந்தை பிறந்தால் சங்கர ஜாதிகள் என்று பெயர். பல்வேறு ஜாதிகள் இப்படித்தான் உற்பத்தி ஆனது. இது ஆரியர்களின் நிலைமை.

ஆனால் நமக்கு அப்படி இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகள் இருந்தன. அவர்கள் தனித்தனி குடிகளாக இருந்தனர். அந்த குடிகளும் ஜாதிகளும் ஒன்று என்று இன்று சிலர் பேசி வருகிறார்கள், ஆனால் அது உண்மையல்ல. குறவர்கள் என்று இருக்கிறார்கள். அது கெட்ட வார்த்தை இல்லை. குன்றுக்கு தலைவர் இருப்பார், அவர் குன்றவர். அந்த குன்றவர் என்பவர்தான் குறவரானார். அவர்கள் மதிக்கப்பட்டவர்கள். குறவர் கோன் என்று இருந்தார்கள், கோன் என்றால் மன்னன் என்று இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக நம்முடைய நிலைமை வேறு, ஆரியர்களுடைய நிலைமை வேறு. அந்த ஆரியர்கள் வட இந்தியா முழுவதும் பரவினார்கள். அவர்கள் பரவிய பகுதிக்கு பிரம்ம வர்தம் என்று பெயர். கங்கை சமவெளி பகுதிக்குள் பரவினார்கள், ஆரிய வர்தம் என்று பெயர் பெற்றனர். அந்த ஆரியப் பார்ப்பனர்கள் தெற்கு நோக்கி நகர்ந்து வந்தனர். சத்திரிய, வைசியர்கள் அதிகம் வரவில்லை. ஆனால் இங்கு வந்தவர் பார்ப்பனர்கள் அந்த ஆரிய சமூகக் கட்டமைப்போடு வந்தனர்.

(தொடரும்)

தொகுப்பு: விஷ்ணு

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நாத்திகப் புரட்சியை நோக்கி சமூகத்தை நகர்த்துவோம்

எட்வின் பிரபாகரன்

*“உலகம் முழுவதும் பல நாடுகளில் நாத்திகக் கொள்கைகள் நசுக்கப்படுவதும், நாத்திகர்கள் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுவதும், முன்னொரு காலத்தில் வழமையாக இருந்து வந்த நிலையில், தற்போதும் சில நாடுகளில் அத்தகையதொரு நிலையே தொடர்வது வேதனைக்குரிய ஒன்றாகும். நாத்திகர்களுக்கு எதிரான எதிர்மறை எண்ணங்களும், அச்சுறுத்தல்களும், பாரபட்சங்களும், விரோதங்களும் சகிப்புத்தன்மையற்ற மனநிலையும் பல்வேறு வலதுசாரி நாடுகளில் இன்றளவும் பரவலாக இருக்கின்றன. நாத்திகர்கள் என்றாலே “ஒழுக்கம் இல்லாதவர்கள்” என்கிற அடிப்படை முகாந்திரமற்ற வெறுப்புப் பிரச்சாரமும் செய்யப்படுகின்றது.*

*சொந்த குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டு, உறவுகளால் கைவிடப்பட்டு, சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டு, அரசுகளால் தண்டிக்கப்பட்டு, ஒரு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்படியான வாழ்க்கையை நாத்திகர்கள் மேற்கொள்ள வேண்டிய சூழல் நிலவுகிறது. இதெல்லாம் தாண்டி நாத்திகர்கள் தங்களை மனிதநேயர்களாக (humanist) அடையாளப்படுத்திக் கொண்டு, சர்வதேச அளவில் மனித உரிமைக்காகவும், சமத்துவத்துக்காகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தும், புவி வெப்பமயமாதலை தடுக்கும் நோக்கோடும், பாலின உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டும், LGBTQ+ உரிமைகளை வென்றெடுக்கவும் தொடர்ச்சியாக பல இன்னல்களை கடந்து செயல்பட்டு வருகின்றனர். சர்வதேச அளவில் நாத்திக இயக்கங்களை ஒருங்கிணைக்க Humanist International என்கிற கூட்டியக்கமும் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.*

*ஒருபுறம், ஐநா சபையின் பொது அவையில் கொண்டுவரப்பட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 18 வது விதி, இறை நம்பிக்கையாளர்களின் மத உரிமைகளையும் நாத்திகர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில், மறுபுறம், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் அமெரிக்காவில் நடத்திய ஆய்வில் (2011), பாலியல் வன்கொடுமையாளர்களை இந்த சமூகம் பார்க்கும் அதேவிதத்தில் நாத்திகர்களையும் பார்ப்பதாகத் தெரியவந்துள்ளது . ஜெர்மனியில் கிறித்தவ மதத்தை ஒருவர் கைவிட்டால் அவர் அரசுக்கு “நிர்வாகக் கட்டணம்” செலுத்த வேண்டும் என்பது சட்டத்திலேயே உள்ளது. அயர்லாந்து நாட்டின் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியராக வேண்டுமென்றால், கிறித்தவக் கல்லூரிகளில் மதப்பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே முடியும்.*

*உடல் உறுப்பு தானத்திலும் கூட நாத்திகர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவதாக Phil Zuckerman உருவாக்கிய “Atheism, Secularity and Well being” (2014) என்ற ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. Gallup (2015) கணக்கெடுப்பில், 40% அமெரிக்கர்கள், “நாத்திகர்களுக்கு வாக்களிக்க மாட்டோம்” என்று கூறியுள்ளனர். மின்னிசோட்டா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் (2014), 42% பேர் “தங்களது பிள்ளைகளை நாத்திகர்களுடன் மணம்முடித்துக் கொடுக்க மாட்டோம்” என்று அறிவித்துள்ளனர். விவாகரத்து வழக்குகளில் கூட நாத்திக பெற்றோர்களின் உரிமை மறுக்கப்படுகிறது. “குழந்தை யாரிடம் இருக்கலாம்?” என்ற கேள்வி வரும் பொழுது, நாத்திகர்களிடம் குழந்தை வளர்வது சரியல்ல என்ற கருத்தின் அடிப்படையில், பல அமெரிக்க குடும்ப நல நீதிமன்ற தீர்ப்புகள் வெளியாகும் உண்மையை, நியூயார்க் பல்கலைக்கழகத்தின் Law Review இதழும் (2006). வெளிப்படுத்துகிறது.*

*16.12.2016ல் நாத்திகர்களின் உரிமைகளை பாதுகாக்கும் மசோதாவில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கையெழுத்திட்டிருந்தாலும் கூட, இந்த 8 ஆண்டுகளில் பெரிய அளவுக்கு எந்த மாற்றமும் சமூக உளவியலில் நிகழவில்லை. ஆப்கானிஸ்தான், ஈரான், மாலத்தீவு, மலேசியா, மவுரிடானியா, நைஜீரியா, பாகிஸ்தான், கத்தார், சவுதி அரேபியா, சோமாலியா, லிபியா ஐக்கிய அரபு அமீரகம், ஏமன் ஆகிய 13 நாடுகளில், தீவிர நாத்திகம் பேசுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடிய சட்டப்பிரிவுகள் இன்றளவும் உள்ளன. “Free Saudi Liberals” என்ற பெயரில் ஒரு முற்போக்கு இணையதளத்தை தொடங்கி பகுத்தறிவு பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்த Raif Badavi என்பவர் 2012இல் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஏழு ஆண்டு சிறை வாசமும், 600 சவுக்கடிகளும் வழங்குமாறு தீர்ப்பு எழுதப்பட்டது. சமீபத்தில் (2022) தான் அவர் தண்டனை காலம் முடிந்து விடுதலை அடைந்தார். கடவுச்சீட்டு முடக்கப்பட்டதால் பத்தாண்டுகள் எந்த வெளிநாட்டுக்கும் செல்ல முடியாத அவல நிலையில் உழல்கிறார்.*

*எந்த மதத்தைச் சேர்ந்த அல்ஜீரிய நாட்டுக் குழந்தையாக இருந்தாலும், பள்ளியில் இஸ்லாமை கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இந்திய நாட்டில் “மதச்சார்பின்மை” என்ற பெயரில், அனைத்து மதத்தில் உள்ள அறிவியலுக்கு ஒவ்வாத கற்பனை புராணங்களும், கட்டுக்கதைகளும் இன்றளவும் பள்ளிப்பாட புத்தகத்தில் நீக்கமற நிறைந்துள்ளன. கவுரி லங்கேஷ், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி போன்ற அறிஞர் பெருமக்கள் படுகொலை செய்யப்படும் நிலையில்தான் நம் சமூகம் உள்ளது. பக்கத்து நாடான வங்கதேசத்திலும் அவிஜித் ராய் என்ற சீரிய பகுத்தறிவாளர், புத்தகக் கண்காட்சி வாசலிலேயே வெட்டிக் கொலை செய்யப்பட்டார். நாத்திக சமயங்களான புத்தமும், சமணமும், சார்வாகமும், ஆசீவகமும் தழைத்தோங்கிய இந்த இந்திய துணைக் கண்டத்தில், இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகிறது என்பதை வரலாற்றின் பெருங்கறையாகக் கருத வேண்டியுள்ளது. ஈரான் நாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கும், வழக்கறிஞர் ஆவதற்கும் ஏதோ ஒரு மதத்தில் உறுப்பினராக இருந்தே தீர வேண்டும் என்கிற நிர்பந்தம் உள்ளது. எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக, 2014 மார்ச் மாதத்தில் சவுதியில் “நாத்திகம் பேசும் அனைவரும் தீவிரவாதிகள்” என்று பிரகடனப்படுத்தும் அரசாணை வெளியிடப்பட்டு சர்ச்சையானது.*

*மேற்கத்திய நாடுகளில் நாத்திகத்தின் தோற்றம், அறிவியலின் அடிப்படையில் இருந்தது. ஆனால், இந்திய துணைக் கண்டத்தில் நாத்திகத்தின் தோற்றம், சனாதன ஒழிப்பை அடிப்படையாகக் கொண்டது. தற்போது, நன்கு கல்வி கற்றுப் பட்டம் பெற்ற பெருமக்களின் எண்ணிக்கை, நம் நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் நிலையில், அறிவியல் வழியில் நாத்திக சிந்தனைகளை விதைப்பதும் எளிமையானது; அவசியமானதும் கூட. அதே வேளையில் , “கடவுள் இல்லை” என்று பிரச்சாரம் செய்து விடுவதால் மட்டுமே, அனைத்து சமூக மாற்றங்களும் நிகழ்ந்து விடாது. இறை மறுப்புக் கொள்கை என்பது, 1. ஜாதி ஒழிப்பு, 2. வர்க்க பாரபட்ச ஒழிப்பு, 3. பாலின சமத்துவம், 4. மாற்றுப் பாலின உரிமைகள், 5. மாநில சுயாட்சி (அல்லது) தனிநாடு, 6. மொழி உரிமைகள், 7. சூழலியல் விழிப்புணர்வு போன்ற இன்னும் பல கொள்கைகளுடன் இணைக்கப்பட்டு, ஒரு கருத்துருவாக்கம் பெறும்போது தான், அந்த இறை மறுப்புக்கொள்கை நம்முடைய சமுதாயச்சூழலில் அர்த்தமுள்ளதாக ஆகிறது. எந்த நாத்திக இயக்கமும், ஒருவர் ஆத்திகராக இருக்கிறார் என்பதற்காகவே அவர் அழிக்கப்பட வேண்டியவர் என்றோ, அவர் ஒழிக்கப்பட வேண்டியவர் என்றோ, கொள்கைகளை கொண்டிருக்கவில்லை. ஆனால் மதப்பித்துபிடித்து அலையும் மடையர்கள், இயக்கமாக ஒன்றிணைந்து, சங் பரிவார் வானர கூட்டங்களாக பரிணமித்து, அறிவியல் மனப்பான்மையை சிதைக்கும் வேலைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், ஒரு மிகப்பெரிய நாத்திகப் புரட்சியை நோக்கி நம் சமூகம் நகர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!”*

## இந்தியாவை இரண்டாகப் பிரித்தது பாஜகதான்

தென் மாநிலங்கள் பிரிவினையைப் பேசுகின்றன என்ற அபத்தமான வாதங்களை அமித் ஷா சமீபத்தில் வைத்திருந்தார். ஒன்றிய அரசே தனது பாரபட்சமான செயல்பாடுகளால் தென் மாநிலங்கள் வேறு, வடமாநிலங்கள் வேறு என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு, பிரிவினைவாதம் பேசுகிறார்கள் என இப்போது வெற்றுக் கூச்சலிடலாமா என்று தென் மாநிலங்களில் இருந்து பதிலடிகள் கொடுக்கப்பட்டன. கேரளாவைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.-யும், அக்கட்சியின் செயற்குழு உறுப்பினருமான சசிதரூர் பார்ப்பனர்கள் மேடையிலேயே இந்த விவாதத்தை துணிச்சலோடு எழுப்பியிருக்கிறார்.

துக்ளக் இதழின் 54-வது ஆண்டு விழா சென்னையில் (15.01.2023) நடைபெற்றது. வழக்கமாக பாஜக, ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத்துவ அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், அவர்களது ஆதரவாளர்களே சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்பார்கள். ஆனால் இம்முறை சசிதரூர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இவர் ஏன் துக்ளக் விழாவில் கலந்துகொள்கிறார் என்றெல்லாம் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் பார்ப்பனர்கள் குழுமியிருந்த அந்த அரங்கில் சசிதரூர் முன்வைத்த கருத்துக்கள் முக்கியமானவை. “தற்போது நிதிப் பகிர்வு கொள்கையால் தென் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன. திட்டமிட்டு பொருள் உற்பத்தியை பெருக்கும் தென் மாநிலங்கள் ஈட்டுவதையெல்லாம் மக்கள் தொகையை மட்டுமே பெருக்கிக் கொண்டிருக்கும் வட மாநிலங்களுக்கு தூக்கிக் கொடுக்கிறார்கள். சுகாதாரக் கட்டமைப்பை பலப்படுத்தியிருக்கும் தென் மாநிலங்களுக்கு, ஒன்றிய அரசு சுகாதாரத்திற்கான நிதியை குறைவாகவே கொடுக்கிறது. தென் மாநிலங்கள் கல்வியை மேம்படுத்தினால், ஒன்றிய அரசால் அதற்கான நிதியும் குறைக்கப்படுகிறது” என்று சசிதரூர் கூறியிருக்கிறார்.

கூட்டத்தில் இருந்த பார்ப்பனர்களும், பாஜக ஆதரவாளர்களும் கடுமையாகக் கூச்சலிட்டபோதும் தனது கருத்துக்களை துணிச்சலாகக் கூறியிருக்கிறார் சசிதரூர். “உங்களுடைய தமிழ்நாடு, என்னுடைய கேரளா போன்ற மாநிலங்கள் பாரபட்ச நிதிப் பகிர்வுக் கொள்கையால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. உத்தரப் பிரதேச மாநிலம் 1 ரூபாய் வரி செலுத்தினால் 1.79 ரூபாயாக ஒன்றிய அரசு திருப்பிக் கொடுக்கிறது. ஆனால் கர்நாடகத்திற்கு 47 பைசாவும், தமிழ்நாட்டிற்கு 29 பைசாவும் மட்டுமே திருப்பிக் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த பாரபட்சம்? கர்நாடக மாநில வளர்ச்சிக்கான செலவினங்களில் 72 விழுக்காடு மாநில அரசு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் பீகார் மாநில வளர்ச்சிக்கான செலவினங்களில் 23 விழுக்காடு செலவினங்களை மட்டுமே மாநில அரசு நிதியில் செய்கிறது. மீதி 77 விழுக்காடு செலவினங்களுக்கு ஒன்றிய அரசு நிதியை வாரி வழங்குகிறது. உலகம் முழுவதும் கூட்டாட்சி தத்துவம் என்பது உழைத்து முன்னேறும் மாநிலங்களுக்கு பரிசு கொடுத்து ஊக்குவிப்பது என்பதுதான். ஆனால் ஒன்றிய பாஜக ஆட்சியில் மட்டும்தான் உழைத்து முன்னேறும் தென் மாநிலங்கள் தண்டிக்கப்படுகின்றன. மக்கள் தொகையை மட்டுமே பெருக்கும் வட மாநிலங்களுக்கு தென் மாநில மக்களின் வரிப்பணம் வாரி வழங்கப்படுகிறது.” என்று ஆணித்தரமாக கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார் சசிதரூர்.

“மக்கள் தொகுதிகளை வரையறுத்த பிறகு, அனைத்து தென் மாநிலங்களையும் விட உத்தரப் பிரதேசத்தில் அதிக எம்.பி.க்கள் இருப்பார்கள். இந்தி பேசும் மாநிலங்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்காக அதிகரித்துவிட்டால் இந்தியைத் தேசிய மொழியாக்கும் சட்டத்தை இயற்றுவதை எது தடுக்கும்?” என்ற கேள்வியையும் சசிதரூர் எழுப்பியிருக்கிறார். மீண்டும் பாஜக ஆட்சி தொடருமானால் ஏற்படப்போகும் பேராபத்து என்ன என்பதற்கு இது ஒன்றே போதுமானது. இக்கருத்துக்களை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்போம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 19, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran